| O.S.No. 310/2022 | PW1: திரு. வீராசாமி<br>த/பெ. திரு. பலராம கவுண்டர் | 25-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் தவசி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பிறந்து வளர்ந்தது எல்லமே தவசி கிராமத்தில்தான். நான் தவசி கிராமத்தில் ஒரு நாட்டாமைதாரர் ஆவேன். வழக்கு சொத்து எனது தகப்பனார் பலராம கவுண்டர் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எனது தந்தை கிரையம் வாங்கிய கிரைய பத்திரம் ஆகும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் கிராம நத்தம் சர்வே எண். 206/1B என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அங்கமுத்து கவுண்டர் வகையறா வீட்டிற்கும் தோட்டத்திற்கும் வடக்கு கிழக்கு என்றும், தங்கவேலு கவுண்டர் காலி மனைக்கும் தோட்டத்திற்கும் தெற்கு மேற்கு என்றும், இதன் மத்தியில் கிழக்கு மேற்கு 22 கஜம், வடக்கு தெற்கு 18 கஜம் கொண்ட மனையும் அதில் உள்ள கூரை வீடு உட்படவும் என்று வா.சா.ஆ.1–ல் ஜக்குபந்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. கிராம நத்த சர்வே எண். 206–க்கு தற்போதைய புதிய சர்வே எண். 298/40, 298/22, 298/36, 298/34 ஆகிய சர்வே எணகளுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், சர்வே எண். 298/40, 298/34–ல் பாதிதான் வரும். எனது வழக்கில் சர்வே எண். 298/40, 298/34–ல் பாதிதான் வருகிறது என்று சொல்லியுள்ளீர்களா என்றால் அது சரியாக தெரியவில்லை. அவ்வாறான குறிப்பு எனது வழக்கில் இல்லை என்றால் தற்போது ஏற்றிக்கொள்ளுங்கள்.

4. சர்வே எண்.206–க்கு சம்மந்தப்பட்ட புதிய சர்வே எண்கள்தான் 298/40, 298/22, 298/36, 298/34 என்பவதற்கு ஆதாரமாக

ஆவணங்கள் ஏதேனும் தாக்ல்ல செய்துள்ளீர்களா என்றால் ஆவணங்கள் இல்லை, வரைபடம் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண். 298/40-க்கான பட்டா என் பெயரில் உள்ளது. சர்வே எண். 298/34-க்கான பட்டா கோவிந்தகவுண்டர், நடராஜன் ஆகிய இருவர் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான், அது UDR-ல் தவறுதலாக வழங்கப்பட்டுவிட்டது. சர்வே எண். 298/36-க்கான வருவாய்த்துறை ஆவணங்களில் வழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 298/22க்கான பட்டா என் பெயரில் உள்ளது.

5. தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்று தீர்ப்பளிக்கவேண்டும் என்று இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு சர்வே எண். 298/34-தான் வழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், சர்வே எண். 298/36-லும் வழி உள்ளது. 298/36 புளியாத்தம்மன் கோயில் தெருவிலிருந்துஎன் தந்தை கிரையம் பெற்ற சொத்திற்கு செல்வதற்காக செல்லும் வழி ஆகும். சர்வே எண்.298/34 வழியாக களத்துமேட்டுத் தெருவிலிருந்து செல்வதற்கான மற்றொரு வழி உள்ளது.

6. என் தந்தை கிரையம் வாங்கிய சொத்திற்கு போவதற்கான வழி என்று சொல்லி ஏற்கனவே செய்யாறு உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 58/2020 என்ற வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சர்வே எண். 298/34, 298/36 ஆகிய என் தந்தை கிரையம் வாங்கிய சொத்துக்களுக்கு நான் செல்வதை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த

வழக்கு நிலுவையில் இருந்தபோது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு பிறகுதான் போட்டேன். அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை.

7. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் பட்டா எண். 298/34 தவறுதலாக கோவிந்த கவுண்டர், நடராஜன் ஆகிய இருவர் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து மனு கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். மேற்படி UDR திட்டத்தின் கீழ் பட்டாவானது 1986–ல் வழங்கப்பட்டது. கொரோனா காலத்தில்தான் மேற்படி பட்டாவை தவறுதலாக கொடுத்துவிட்டார்கள் என்று மனு கொடுத்தேன் என்றால் சரிதான், அதற்கு முன்பு தெரியாது. சர்வே எண். 298/36 வழியானது வழி என்றுதான் வருவாய்த்துறை ஆவணங்களில் எழுதப்பட்டுள்ளது என்றாலும், என்னுடைய சொத்திற்கு செல்லும் வழி என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். அந்த வழியினை என் தந்தை கிரையம் வாங்கியதற்கு பிறகு ஏற்படுத்தினாரா என்றால் அந்த வழியைத்தான் அனைவரும் பயன்படுத்தி வந்தனர்.

8. சர்வே எண். 298/36–ல் பாதி இடத்தினை என் தந்தை கிரையம் வாங்கினார், மீதி பாதி இடமானது அனைவரும் பயன்படுத்தக்கூடிய பொது வழி ஆகும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் பொது வழி என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு இல்லை. சர்வே எண்கள். 22, 24, 34, 35 –ன் வடவண்டை பக்கத்தில் புளியாத்தம்மன் கோயில் தெரு உள்ளதா என்றால் உள்ளது. அந்த தெருவினை பள்ளத் தெரு சொல்லமாட்டார்கள், கலத்துமேட்டுத் தெரு என்று சொல்வார்கள்.

9. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் சர்வே எண். 298/34-ல் பாதி சொத்தானது புளியாத்தமன் கோயில் தெரு என்கிற களத்துமேட்டுத் தெருவிற்கு தெற்கு என்று ஜக்குபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி தெருவானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்று மறுபடியும் தெற்கு நோக்கி திரும்புகிறது என்றால் சரியல்ல, வடக்கு பக்கமும், தெற்கு பக்கமும் தெரு உள்ளது. தெற்கு நோக்கி திரும்பும் தெரு தற்போது வேளாளர் தெரு என்று சொல்வார்கள் என்றாலும், அதற்கு முன்பு புளியாத்தம்மன் கோயில் தெரு என்றும் சொல்வார்கள் என்றால் சரிதான். புளியாத்தம்மன் கோயில் தெரு எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து உள்ளது என்றால் சரிதான்.

10. சர்வே எண். 36 வேளாயர் தெருவிலிருந்து கிழக்கு நோக்கி வழி செல்கிறது என்றால் சரிதான். சர்வே எண். 298/36-ல் வழி போக மீதமுள்ள என் தந்தை கிரையம் வாங்கிய பாதி சொத்தானது வட பக்கம் மற்றும் தெற்கு பக்கம் உள்ளது. என் தந்தை கிரையம் வாங்கும் காலத்திலேயே மேற்படி வழி போய்க்கொண்டிருந்தது என்றால் சரிதான். சர்வே எண். 298/36-ல் கீழண்டை பக்கம் பாதியினை என் தந்தை கிரையம் வாங்கினார். சர்வே எண். 298/36-க்கு வடவண்டை பக்கம் முதலில் நடராஜன் என்பவர் கிரையம் வாங்கிய சொத்து உள்ளது என்றால் சரிதான். அதனை சர்வே எண். 298/35 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் .298/35-க்கு கிழக்கே சர்வே எண். 298/34 உள்ளதா என்றால் அது வரைபடத்தை பார்த்தால்தான் சொல்ல முடியும்.

11. சர்வே எண். 298/34 க்கு கிழக்கே நாராயண கவுண்டரின் மெத்தை வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கும் கிழக்கே சர்வே எண்.

298/33 நடேச கவுண்டரின் சொத்து உள்ளது என்றால் சரிதான். அதற்கும் கிழக்கே சர்வே எண். 298/24 ராமலிங்கம் என்பவரின் சொத்து உள்ளது என்றால் அது 150 மீட்டருக்கு அப்பால் உள்ளது, அதனை வரைபடம் பார்த்தால்தான் சொல்லமுடியும். சர்வே எண். 298/34-ல் பிரதிவாதிகள் மெத்தை வீடு கட்டியுள்ளார்கள் என்றால் கொரோனா காலத்தில் கட்டிவிட்டார்கள். அந்த வீட்டின் மேலண்டை பக்கம் நடராஜன் வீடு கட்டியுள்ளார்.

12. சர்வே எண். 298/34-ன் கீழண்டை பக்கம் நடராஜனின் மாட்டுக்கொட்டகை உள்ளது என்றால் இல்லை, அது என் தந்தை கிரையம் வாங்கிய சொத்து, அந்த இடம் தற்போது காலி மனையாக என் அனுபவத்தில் உள்ளது. வேளாளர் தெருவில் சர்வே எண். 298/36-க்கு தெற்கே நான் சொந்தமாக கிரையம் வாங்கிய சொத்தில் எனது மெத்தை வீடு உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண். 298/37 என்றால் ஞாபகமில்லை. அதற்கும் கிழக்கே சர்வே எண்.298/38 அண்ணாமலை என்பவருக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரிதான். அதற்கும் கிழக்கே சர்வே எண். 298/39 நடராஜன் கிரையம் வாங்கிய சொத்தில் மெத்தை வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கும் கிழக்கே சர்வே எண். 298/24 எனக்கு சொந்தமான காலி மனை என்றால் இல்லை. அதற்கும் கிழக்கே சர்வே எண். 298/21 மாதவனுக்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் சரிதான், அதற்கு முன்பு அந்த சொத்து நாராயணனுக்கு சொந்தமாகும்.

13. நான் மேலே சொல்லியுள்ள சர்வே எண்கள். 298/37, 298/38, 298/39, 298/24, 298/21 ஆகிய சர்வே எண்களுக்கு தெற்கே எனக்க சொந்தமான சர்வே எண். 298/40 சொத்து உள்ளது என்றால் சரிதான்.

வேளாளர் தெருவில் உள்ள எனது வீடானது தெருவை பார்த்ததுபோல் மேற்கு தெற்கு இரண்டு பக்கங்களும் வாசல்படி வைத்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 298/36 வழியானது எனக்கு, அண்ணாமலை, நடராஜன் ஆகியோருக்கு மட்டுமே என்றாலும், மாலவனுக்கு இல்லை என்றாலும் சரிதான். வருவாய்த்துறை ஆவணங்களின்படி சர்வே எண். 298/36 மாளவன் வீட்டு வரை வழி வருகிறது என்றால் அது தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. சர்வே எண். 298/36-ல் மாளவனுக்கு வழி இல்லை என்று சொல்வது தவறு என்றாலும், அதில் மாளவனுக்கும் வழி உள்ளது என்றாலும் சரியல்ல.

14. சர்வே எண். 298/36 இடத்தினை என் தந்தை கிரையம் வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 298/36 அனைத்து தரப்பினரும் செல்லக்கூடிய வழி என்றாலும், அந்த வழியானது எனக்கு மட்டுமே சொந்தமான வழி இல்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண். சர்வே எண். 298/34, 35 ஆகிய சொத்துக்களுக்கு சர்வே எண். 298/36 வழியாகத்தான் வேளாளர் தெருவிலிருந்து செல்லாம் என்று சொன்னால் களத்துமேட்டுத் தெரு வழியாகவும் செல்லலாம். சர்வே எண். 298/34-க்கும், என் தந்தை வாங்கிய சொத்திற்கம் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், அச்சொத்தினை என் தந்தை அனுபவித்து வரவில்லை என்றாலும் சரியல்ல, நான்தான் அனுபவித்து வருகிறேன். நான் அச்சொத்தினை அனுபவித்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

15. ஊரில் உள்ள அனைவருக்கும் ஒரே நேரத்தில் வருவாய்த் துறை பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில்

சர்வே எண். 298/34 சொத்தினை கோவிந்த கவுண்டரும், நடராஜ கவுண்டர் ஆகிய இருவர் அனுபவித்து வந்ததால் அவர்கள் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஊரில் முக்கால்வாசி சொத்து அரசுக்கு சொந்தமான சொத்து என்றாலும், அதில் சர்வே எண். 298/24, சர்வே எண். 298/22, சர்வே எண். 298/40 ஆகிய சொத்துக்களுக்கு எனது பெயரில் பட்டா தவறுதலாக வாங்கிக்கொண்டேன் என்றால் சரிய்லல. சர்வே எண். 298/24-க்கு எனது பெயரில் பட்டா இல்லை. சர்வே எண். 298/37 -ல் ஒரு பகுதியினை ஜெயராம கவுண்டரிடமிருந்தும், மற்றொரு பகுதியினை வேறொருவரிடமிருந்தும் காலி மனையாக கிரையம் வாங்கினேன். அந்த கிரைய பத்திரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அந்த கிரைய பத்திரத்தை பார்த்தால் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான்.

16. சர்வே எண். 298/22 என் தந்தை வா.சா.ஆ.1 -ன் மூலம் கிரையம் பெறப்பட்டது ஆகும். சர்வே எண். 298/40, சர்வே எண். 298/37 ஆகியவற்றை ஜெயராம கவுண்டரிடமிருந்து கிரையம் வாங்கினேன். அந்த கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. மேற்படி கிரையத்தை உட்பிரிவு செய்யப்பட்டதற்கு பிறகுதான் வாங்கினேன். சர்வே எண். 298/37 மற்றும் 298/40-ல் கிழக்கு மேற்கு, வடக்கு - தெற்கு எவ்வளவு அடிகள் கிரையம் பெற்றேன் என்று அந்த கிரையப்பத்திரத்தை பார்த்தால் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். நான் அவ்வாறு எந்த கிரையமும் வாங்கவில்லை என்றாலும், அரசுக்கு சொந்தமான சொத்தினை எனது பெயரில் பட்டா மாற்றிக்கொண்டேன் என்றாலும் சரியல்ல.

17. அடிப்படையிலேயே என் வழக்கு தவறு என்றாலும், அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 298/34-ல் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று ஏற்கனவே நான் தாக்கல் செய்த அ.வ. எண். 58/2020 வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் அதே சொத்தினைப் பொருத்து உரிமை கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அதில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

18. அ.வ.எண். 58/2020 வழக்கினை பிரதிவாதிகள் வீடு கட்டி முடித்து அதில் வசித்து வந்ததற்க பிறகுதான் தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் வடமேற்கு மூலையில் உள்ள சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று கோரியுள்ள பரிகாரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனது தாவாவில் பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளதாக கூறப்பட்டுள்ள இடத்தின் அளவுகளை சரிகாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வரைபடம் தவறு என்றாலும், அது உண்மையான ஒன்று அல்ல என்றாலும் சரியல்ல. சர்வே எண். 206/1B-ல் தான் நான் சொல்லியுள்ள 4 சர்வே எண்களும் வருகிறது என சொல்லியுள்ள விஷயம் தவறு என்று சொன்னால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.25 17:44:09 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**